நலத் துறைமூலமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் இலவசப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கினால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நடப்பு நிதியாண்டில் விரைவில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை அரசுக்கு வரப்பெறவில்லை; வந்தால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

12—

பேருந்து வசதி

***18914—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், க.ஆண்டாப்பட்டு கிராமத்திற்கு நகரப் பேருந்து சென்று வர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், க.ஆண்டாப்பட்டு கூட்டுச் சாலை வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் அங்கு நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கிறது. திருவண்ணாமலையிலிருந்து நடுப்பட்டு கிராமம் வரை நகரப் பேருந்து ஒன்று சமீபத்தில் புதிதாக இயக்கப்பட்டது. இப்பேருந்தினை நடுப்பட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள க.ஆண்டாப்பட்டு கிராமம் வரை, சாலை சரிசெய்யப்பட்டவுடன் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006 ஜனவரி 17]

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டாப்பட்டு வழியாக அனைத்துப் பேருந்துகளும் செல்கின்றன, ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். திருவண்ணாமலை-திருக்கோவிலூர் சாலையிலே, இந்த ஆண்டாப்பட்டு என்பது மையப் பகுதியிலே இருக்கிற ஊர். ஆனால் அந்த State Highways Road–லேயிருந்து ஆண்டாப்பட்டுக்குப் போக வேண்டுமென்று சொன்னால் 2 கிலோ மீட்டர் தூரம். இறுதியாக அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, கொளக்கடி, நடுப்பட்டு, அது பக்கத்திலே ஒரு கிலோ மீட்டரிலே ஆண்டாப்பட்டு இருக்கிறது என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஒரு கிலோ மீட்டர் ரோடு என்பது சரி செய்யப்பட்டுவிட்டது. எனவே, அரசு உடனே அந்த route–ஐ அனுமதிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் பதில் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். அந்தச் சாலை சரி செய்யப்பட்டவுடன், பேருந்தினை இயக்குவதற்கு அரசிடம் ஏற்கெனவே செயற்குறிப்பு இருக்கிறது. ஆகவே, அந்தச் சாலை வசதிப் பணி முடிவடைந்தவுடன்—உறுப்பினர் சொல்வதுபோல, அந்தச் சாலை வசதிப் பணி முடிந்து, சரி செய்யப்பட்டிருந்தால், பேருந்தை உடனடியாக இயக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** குற்றச்சாட்டு இல்லை, குற்றச்சாட்டு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எ.வ. வேலு: ** நான் சொல்வது, பாதை சரி செய்து 6 மாதங்கள் ஆகிவிட்டன. பாதை சரி செய்தால், 'விடுகிறேன்' என்று அமைச்சர் சொல்கிறார். பாதை சரி செய்து 6 மாத காலம் ஆகிவிட்டன. எனவே, ஆண்டாப்பட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாதை சரியாக இருந்தால் பஸ்ஸை விடுகிறோம் என்று சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய பால் வளத் துறை அமைச்சர்கூட கோரிக்கை வைத்து, சென்ற மாதம் அது இயக்கப்பட்டது. அந்த நேரத்தில் அந்தப் புதிய பேருந்து இயக்கப்படுகின்ற நேரத்தில் அந்தச் சாலை சரி செய்யப்படாமல் இருந்தது. அதற்குப் பின்பு, அந்தச் சாலை சரி செய்யப்பட்டுவிட்டதாக இப்போதுதான் உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். ஆகவே, சாலை முன்பே சரி செய்யப்படவில்லை. இப்போது சரி செய்யப்பட்டிருந்தால்—புதிய பேருந்துகளை இயக்கியதற்குப் பின்பு, ஓரிரு மாதங்களுக்குள்தான் அது சரி செய்யப்பட்டிருக்க வேண்டும். இருந்தாலும், உடனடியாக அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 13, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

13—

மின் கணக்கெடுப்பு

***50030—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் நுகர்வு கணக்கீட்டாளர்கள் குறிப்பிட்ட கால அளவிற்குள் கணக்கெடுப்பு செய்யாமல் தாமதமாகக் கணக்கெடுப்பதால் நுகர்வோருக்குக் கூடுதல் கட்டணம் விதிப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை.*